# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்

**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், தை திங்கள் 08ம் நாள்**

**இ.ம.எண்.65/2025**
**இன்**
**அ.வ.எண்.18/2023**

1. வெள்ளிங்கிரி
2. சந்திரா ..மனுதாரர்கள்/வாதிகள்

..எதிர்..

1. பழனிச்சாமி
2. ஜெகநாதன்
3. நாச்சிமுத்து ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 20.01.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.A.சண்முகசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.P.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகியும் நிகழ்த்திய இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

நிலஅளவையரின் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் மனு சொத்தின் இயற்கை அமைப்புக்களை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 26 விதி 9 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :**

**2.1** மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒரு முத்துச்சாமிகவுண்டருக்கு கடந்த 10.12.1907ம் தேதியிட்ட ஆவண எண்.2708/1907 மற்றும் கடந்த 04.08.1942ம் தேதியிட்ட ஆவண எண்.1268/1942ன் படி தாவா சொத்து பாத்தியப்பட்டது. முத்துச்சாமிகவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய ஒரே மகன் அப்பாச்சிகவுண்டருக்கு தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது. கடந்த 21.093.1982ம் தேதியன்று அப்பாச்சிகவுண்டர் அவருடைய மகன் பழனிச்சாமிகவுண்டர் மற்றும் மகன், மகள்களை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார். 13.06.2005ம் தேதியன்று பழனிச்சாமிகவுண்டர் மற்றும் அவரது வாரிசுகள் அனைவரும் சேர்ந்து தாவா A அட்டவணை சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை வீரபாண்டி கிராமம், கருப்பகவுண்டன்பாளையத்தில் வசிக்கும் சென்னியப்பகவுண்டர் மகன் சி. சண்முகம் என்பவருக்கு விற்பனை செய்து விட்டார்கள்.

கடந்த 09.03.2011ம் தேதியன்று க.ச.எண்.501/1, 502/2ல் உள்ள சொத்துக்களை மனுதாரர்கள் கிரையம் பெற்றார்கள். தாவா பி அட்டவணை சொத்தானது கண்டியன்கோவில் கிராமம் க.ச.எண்.501/1D–ல் 0.10 செண்ட் அளவில் அமைந்துள்ளது. ஆதியில் தாவா பி அட்டவணை சொத்து மனுதாரர்களின் கிரைய முன்னவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அதனை கிழமேல் மெயின் ரோட்டிலிருந்து

தாவா பி அட்டவணை சொத்தை வண்டித்தடமாக பயன்படுத்தி தான் தாவா சொத்தை அடைந்து வந்தார்கள். க.ச.502/2ற்கு செல்வதற்கு மேற்படி வண்டித்தடம் மட்டுமே ஒரே வழியாகும். மேற்படி வண்டித்தட உரிமை 09.03.2011 கிரையப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. வருவாய் ஆவணங்களில் மேற்படி 0.10 தென்வடல் வண்டித்தடம் க.ச.எண்,502/1D என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. க.ச.எண்.502/1 ஆனது 502/1 A முதல் 502/1D வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

தாவா பி அட்டவணை சொத்தான தென்வடல் வண்டித்தடம் க.ச.502/1D ல் அமைந்துள்ளது. மேற்படி வண்டித்தடத்தை உபயோகித்து தான் மனுதாரர்கள் தாவா ஏ அட்டவணை சொத்திற்கு சென்று வருகிறார்கள். மேற்படி வண்டித்தடத்தை மனுதாரர்கள் எவ்வித இடையூறும் இன்றி உபயோகித்து வந்தார்கள். மேற்படி வண்டித்தடம் பொதுவான ஒன்று என்பதும் அதனை மனுதாரர்கள் உபயோகிப்பதும் எதிர்மனுதாரர்களுக்கு நன்கு தெரியும்.

தாவா பி அட்டவணை சொத்தில் உள்ள வண்டித்தடம் மட்டுமே தாவா ஏ அட்டவணை சொத்தை அடைவதற்கு ஒரே வழித்தடம் ஆகும். கடந்த 1 1/2ஆண்டு காலமாக மனுதாரர்களின் உடல்நிலை காரணத்தினாலும், கோவிட் பெருந்தொற்று காரணத்தினாலும், மனுதாரர்கள் தாவா ஏ அட்டவணை சொத்திற்கு செல்லவில்லை. 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் வாரம் தாவா ஏ அட்டவணை சொத்து விவசாயம் செய்வதற்காக பார்க்க சென்றபோது க.ச.எண்.502/1டி ல் உள்ள வழித்தடத்தில் முட்புதர்கள் இருந்ததால் அதனை அகற்ற மனுதாரர்கள் முயற்சித்தார்கள். அப்போது எதிர்மனுதாரர்கள் அவர்களது ஆட்களுடன் தடுத்தார்கள். எனவே தாவா சொத்தின தற்போதைய நிலையை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு நிலஅளவையரின் உதவியுடன் தாவா சொத்தை அளவீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக பாவிக்க கோரி மனுவில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. எதிருரையின் சுருக்கம்.**

**3.1** மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய் மற்றும் மோசடியானது, அது சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. க.ச.501/1 டி–ல் மனுதாரர்கள் சொல்லும் கிழமேல் வண்டித்தடமாக பி அட்டவணை சொத்து பூஸ்துதியில் இல்லை. கடந்த 50 ஆண்டு காலமாக தாவா வண்டித்தடம் புழக்கத்தில் இல்லை. மனுதாரர்களும் அவர்களது கிரைய முன்னவர்களும் தாவா வண்டித்தடத்தை உபயோகித்தது கிடையாது. மனுதாரர்களின் கிரைய முன்னவர்கள் அவர்களது கிரையப்பத்திரத்தில் இருந்தவாரே மனுதார்களுக்கும்வண்டித்தடத்தை குறிப்பிட்டு எழுதிகொடுத்துள்ளார்கள்.

மனுதாரர்களுக்கு அவர்களது சொத்திற்குசெல்வதற்கு வேறு வழித்தடம் உள்ளது. 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் குறித்து மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பவம் பொய்யானது. எனவே மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5**. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், மனுதாரர்கள் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

6. <u>**தீர்வு**</u> :

**6.1** மனுதாரர்கள் தரப்பு வாதத்தை முன்வைக்க போதிய வாய்ப்பளித்தும் அவர்களது தரப்பு வாதம் முன்வைக்கப்படவில்லை.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், க.ச.501/1டி–ல் மனுதாரர்கள் சொல்லும் தடம் பூஸ்துதியில் இல்லை என்றும், சாட்சியங்களை சேகரிக்கும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் அவர்களது சொத்திற்கு செல்வதற்கு வேறு மாற்று வழித்தடம் உள்ளது என்றும், மனுதாரரின் கிரைய ஆவணத்தின் வழித்தடம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அனுபவத்தில் அவ்வாறு வழித்தடம் இல்லை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களின் கிரையப்பத்திரத்தில் தாவா பி அட்டவணை சொத்து வழித்தடமாக குறிப்பிடப்பட்டுள்ளதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொண்டாலும், அது கடந்த 50 ஆண்டு காலமாக புழக்கத்தில் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

க.ச.502/1டி–ல் மனுதாரர்கள் சொல்லும் தடம் பூஸ்துதியில் உள்ளதா என்பதை கண்டறிய வேண்டி தாவா பி அட்டவணை சொத்தின் இயற்கை அமைப்பை பார்வையிட வேண்டியது அவசியம் என்று முடிவு செய்து மனு பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில், மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது**. வழக்கறிஞர் திரு.K.பரணீதரன் M.A.LL.M., **(Hons) M/s. No. 350/2021 (அலைபேசி எண். 9500394912)** அவர்களை, இம்மனுவில் நீதிமன்ற ஆணையராக நியமித்து உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இரு தரப்பினருக்கு அறிவிப்பு அனுப்பியதற்கு பின்னிட்டு, க.ச.502/1D–ல் மனுதாரர்கள் சொல்லும் தடம் பூஸ்துதியில் உள்ளதா என்பதை கண்டறிய வேண்டி தாவா "B" அட்டவணை சொத்தின் இயற்கை அம்சங்களை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.10,000/– நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க :** 10.02.2026

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.01.22 11:22:39 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

<u>**இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**</u> இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.01.22 11:[illegible]

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.